1979 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் மட்டுமே தீர்மானம் திறைவேற்றியது.

(ஆ) செலவைப் பகிர்ந்து கொள்ள வலங்கைமான் ஒன்றியம் முன்வராததால், நடவடிக்கை கைவிடப்பட்டது.

திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம், வலங்கைமான் இரு ஒன்றியங்களையும் சேர்ந்த சந்திரசேகரபுரம், உடையாளூர் கிராமங்களை இணைக்க குடமுரட்டி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க இரு ஒன்றியங்களில் இருந்தும் தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனால் அமைச்சர் அவர்கள் கும்பகோணம் ஒன்றியம் மட்டும்தான் தீர்மானம் போட்டு அனுப்பியுள்ளதாகச் சொன்னார்கள். ஆகவே, கும்பகோணம் ஒன்றியத்தின் தீர்மானத்தை வைத்தே, இரு ஒன்றியங்களையும் இணைப்பு செய்ய குடமுரட்டி ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்தால், அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் அந்த ஆற்றைக் கடக்க முடியும். அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதனுடைய மதிப்பீடு ரூ. 8 லட்சம் ஆகும். வலங்கைமான் ஒன்றியத்தில் இருந்தும் தீர்மானம் வந்தால்தான் செய்ய முடியும்.

இராஜபாளையம் நகராட்சிப் பகுதியில் வழங்கப்பெற்ற தொழில் உரிமம்.

வினா 50—திரு. க. சுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் நகராட்சிப் பகுதியில், செட்டியார் குடியிருப்பில் முறைகேடாக தொழில் உரிமம் வழங்கப்பட்டது குறித்து அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.